# சுட்டி

மாத இதழ்
60 காசு
ஜுலை'85

53

இருட்டு உபயம்:
தமிழ்நாடு அரசு
வெட்டுத்
மின்சாரத் துறை


FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

## கழுதைகள் தான் நாம்

சுவாசமே
சுமையாய்ப் போனதால்!
விரைவில் —
பின்னங்கால்களால்
பேசுவோம்!!

— இளையமகன்






## வங்கிகளின் வளர்ச்சி...


இங்கு
வங்கிகளின் எண்ணிக்கை
வளர்ச்சியடைகின்றன —
ஏழைகளின் பெயர்களில் தான்
கணக்குகளில்லை...!

— புவி. உமாசந்திரன்

## சுதந்திரம்


நூறாண்டு
காலம் —
போராடிப்
பெற்ற
சுதந்திரம் — ஒரு
நூறு
குடும்பங்கள்
வாழத்தானு!

— கே.வி. ராஜேந்திரன்



FREE E- BOOKS , www.thamizham.net.,

# சிந்தனைச்



? ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு அஞ்சி புதுச்சேரிக்குச் சென்று, பாரதியார் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தது பற்றி...?

அகுஸ்தின், கதிராமங்கலம் — 612 106.

! எல்லாத் தலைமறைவு வாழ்க்கைக்கும், அச்சம் தான் காரணம் என்னும் வாதம் பொருந்தாது! திருடன் ஒழிந்திருப்பதையும், தீவிரவாதி ஒழிந்திருப்பதையும், ஒரே விஷயமென்று காவல் துறையே நினைப்பதில்லை. நீங்கள் ஏன்...?

? நிஜம், பொய் —— என்ன வேறுபாடு?

எம். சம்பத், வேலாயுதம்பாளையம் — 639 117.

! உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. இன்னும் கொஞ்ச நஞ்சம் நிஜம் உயிரோடிருக்கும் வரை, இந்த சந்தேகம் வரத் தான் செய்யும்!

? முற்போக்குப் பத்திரிகைகள், ஒன்றையொன்று தாக்கிக் கொள்கின்றனவே, இதன் முடிவென்ன?

எம்.டி. ஜான் கென்னடி, திருப்பத்தூர் (வ.ஆ.)

! வருந்தப்பட வேண்டிய விஷயம் தான். தாங்கள் முற்போக்குக் கொள்கையினர் என்று எடுத்துச் சொல்வதைக் காட்டிலும், தங்களைத் தவிர வேறு யாரும் முற்போக்குக் கொள்கையினர் அல்லர் என்பதை வற்புறுத்தவதே இன்று வழக்கமாகிவிட்டது!

? வாரத்தில் ஐந்து நாள் வேலை அரசுக்கு நன்மையா? மக்களுக்கு நன்மையா?

— யாரோ, கோயம்புத்தூர்.

! ஐந்து நாளாவது ஒழுங்காய் வேலை நடந்தால், எல்லோருக்கும் நன்மை தான்!

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சந்தை

? டி.வி.யில் இந்தி திணிப்புப் பற்றி...?

என். ரெங்கசாமி, கோப்பனூர் புதூர் — 642 120.

! டி.வி.யிலும் என்று திருத்திக் கேளுங்கள் சார்! ஒரு விஷயம் — திணிக்கப்பட்ட எதுவும் ஜீரணித்ததாய், இதுவரைக்கும் செய்தி இல்லை.

? யாரை ஒழித்தால் லஞ்சம் ஒழியும்?

ஜி. மல்லேஸ்வரன், ஜலகண்டபுரம் — 636 501.

! பணத்தை அல்லது மனிதர்களை!

? 50 இதழ்கள் வந்த பின்பும், ஏன் பத்திரிகையின் அளவை மாற்றவில்லை?

பாஸ்கர், மதுரை — 20.

! 50 இதழ்கள் வந்தவுடன், சுட்டியின் அளவை மாற்றி விடுவதாக, யாரிடமாவது வாக்குக் கொடுத்திருந்தோமா, என்ன? 'தொடரும்' என்கிற பத்திரிகையில், 'விலாஸ்' என்னும் 'கிசுகிசு'க்காரர், ''தன் சைஸைக் கூட வளர்த்துக் கொள்ளாத சுட்டி'' என்று கேலி பேசியிருக்கிறார். ஒரு பீரோ அளவிற்குப் பெரிய சைசாக வெளியிட்டால் தான் அவர் திருப்தியடைவார் போலிருக்கிறது. சரி விடுங்கள். நீங்கள் அந்த ரகமில்லை. ஆகவே, உங்களுக்கு ஒரு சின்னச் செய்தி! அளவை மாற்ற வேண்டுமென்ற எண்ணம், ஆசிரியர் குழுவிற்குமிருக்கிறது!

? மூன்றாவது உலகப் போர் வருவதற்கு ஏதாவது அறிகுறி தெரிகிறதா?

இரா. புவனேந்திரன், திருவொற்றியூர்.

! வானிலை ஆராய்ச்சி நிலையம் மாதிரி, சுட்டி என்ன, போர் நிலை ஆராய்ச்சி நிலையமா? உங்கள் கேள்வியிலிருப்பது ஆர்வமா? ஆதங்கமா? - பதில்கள் : மது

FREE E- BOOKS , www.thamizham.net.,

குட்டிக்கதை

# 'அதை மறந்துவிட்டார்'

●



அந்த பெரிய நகரில், 'சிகப்பு விளக்கு' ஏரியா வேண்டுமா வேண்டாமா என்பதை தீர்மானிக்க ஒரு கமிட்டி கூடியது...

அந்த கமிட்டியில்நீதித் துறை, காவல் துறையை சேர்ந்த அதிகாரிகளும், பொது நல அமைப்பின் பிரமுகர்களும் இருந்தார்கள்...

அந்த பிரமுகர்களில் ஒருவர் முத்துக்கனி...

அவர்தான சிகப்பு விளக்கு ஏரியா இவ்வளவு பெரிய நகருக்கு மிக அவசியம் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திப் பேசினார்...

பலர் அதற்கு மாறுபட்ட கருத்துக்களைச் சொன்னார்கள்...

இறுதியாக முத்துக்கனியின் ஒரு வாதம் ஆணித்தரமாக அமைந்தது...

லட்சக்கணக்கான மக்கள் நெரிசல் உள்ள இந்த நகரில் குடும்பப் பெண்கள் பாதுகாப்பாக வாழ சிகப்பு விளக்கு ஏரியா மிகவும் அவசியம்...அப்படிஒரு போக்கிடம் இல்லாவிட்டால, ஆண்கள் தங்கள் விபரீத உணர்ச்சிகளுக்கு ரோட்டில் நடமாடுகிற பெண்களை பலியாடத் துவங்கி விடுவார்கள்...'

இந்த வாதம் கமிட்டியினருக்கு நியாயமாகத் தோன்றியது.. எனவே சிகப்பு விளக்கு ஏரியாவுக்கு அனுமதி தரப் பட்டது.


சிகப்பு விளக்குஏரியா இருந்தால்தான் குடும்ப பெண்களை யாரும் நெருங்க மாட்டார்கள் என்பதை மட்டுமே முத்துக்கனி நினைத்தார்..

ஆனால் அந்த சிகப்பு விளக்கு ஏரியாவுக்கு பெண்கள் வேண்டுமே... அதற்கு குடும்பங்களில் இருந்துதானே பெண்களை கடத்துவார்கள்.. அதை அவர் மறந்து விட்டார்..

அதன் பலன்?....

அடுத்த மாதமே அவருடைய ஒரே மகள் காணமல் போய் விட்டாள்.


●●



# நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?


உங்கள் நூல் மற்றும் இதழ்களுக்கு
பிழை திருத்த நாங்கள் இருக்கும் போது...

"மூன்று முறை ப்ரூஃப் பார்த்தும் எப்படி இந்த தப்பு வந்தது???"



"பகல் முழுக்க அலைச்சல் - நைட்ல ப்ரூஃப் திருத்தினா தப்பு வராம என்ன செய்யும்!!!"

இப்படி வருந்தும் உள்ளங்களுக்கு நோய் தீர்க்கும் மருந்தாக - பிழை அரக்கனோடு சண்டை போட வருகிறோம்.



**PROOF FIGHTERS**

1494, ANNA NAGAR,
MADRAS - 600040.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# கல்வி நிறுவனங்களில் படப்பிடிப்புகள்...

சென்ற மாதத்தின் ஒரு மதிய வேளை. இலயோலா கல்லூரி இயற்பியல் வகுப்பறையில் சில மாணவர்கள் பலகையில் கேலிச் சித்திரங்கள் வரைந்து விட்டு பெண்ணை சீண்டிக் கொண்டிருந்தார்கள்...

அட நம்ம லயோலா கல்லூரி மாணவர்களா இப்படி....? என்று முதலில் எனக்கு அதிர்ச்சி! பிறகு சற்று கவனித்து பார்த்தபோது அது ஒரு "திரைப்பட ஷூட்டிங்" என்று அறிந்து மேலும் அதிர்ந்தேன்.



தனியார் கல்வி நிறுவனங்கள், தங்கள் வ ளாகத்திற்குள் "திரைப்படப்பிடிப்புகள்" நடத்த அனுமதிப்பதில் நமக்கு ஆட்சேபணை இல்லை தான். ஆனால் மாணவர்களையும், ஆசிரியர்களையும் இழிவு படுத்தும் வகையில் எடுக்கப்படும் "டப்பாங்கூத்து" படங்களுக்கெல்லாம் "ஷூட்டிங்" நடத்த நமது கல்வி நிறுவனங்களே அனுமதியளித்து ஆதரவு தருவது வேதனைக்குரியது.

குறிப்பாக மாணவர்களிடம் ஒழுங்கையும், கட்டுப் பாட்டையும் பெரிதும் வலியுறுத்தும் லயோலா கல்லூரியே விளம்பரத்திற்கும் வாடகைப் பணத்திற்கும் ஆசைப்பட்டு சினிமாக்காரர்களிடம் சோரம் போய்க்கொண்டிருப்பது வெட்கக் கேடானது.

— சி. இரகுராமன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# தூக்கு மேடையில் தோழன் பகத்சிங் 11


சட்ட மன்றத்தில் வெடிகுண்டுகளை வீசிய பகத்சிங், தத் இருவரும் தப்பியோட எந்த முயற்சியும் செய்யவில்லை.

இவர்களைத் தொடர்ந்து, இந்துஸ்தான் சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பலரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரையும் கை விலங்கு பூட்டி வைத்ததோடு, எந்தவிதமான வசதியையும் அரசு வழங்கவில்லை.

அரசியல் கைதிகளான தங்களை முறைப்படி நடத்த வேண்டும் என்று கோரி, பகத்சிங் மற்றும் தோழர்கள் அனைவரும், சிறையில் உண்ணாவிரதமிருந்தனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் தான், தோழர் ஜதீந்திர நாத் தாஸ், 63 நாட்கள் உண்ணாவிரதமிருந்து 1929 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் நாள் உயிர் துறந்தார்.

லண்டனிலிருந்து வரவழைக்கப்பட்ட, துப்பாக்கி ரவைகளைச் சோதனை செய்வதில் தேர்ந்தவரான சர்ச்சில் என்பவர், சட்டசபையில், பகத்சிங் கையிலிருந்த துப்பாக்கியிலிருந்தே, சாண்டர்ஸ் உடலிலிருந்து குண்டு வெடிக்கப்பட்டுள்ளது என்று சாட்சியம் சொன்னார்.



FREE E- BOOKS , www.thamizham.net.,

நீதி மன்றத்தையே, தங்களின் அரசியல் மேடையாக்கிக் கொண்டு, பகத்சிங்கும், தோழர்களும் ஓர் அறிக்கை வெளியிட்டனர். அந்த அறிக்கையின் ஒரு பகுதி:

"நாங்கள் கொள்ளையர்களோ, கொலைகாரர்களோ அல்ல. மனிதாபிமானம் கொண்டவர்கள். இந்நாட்டின் வறுமை, அடிமைத்தனம், அறியாமையைக் கண்டு எங்கள் ரத்தம் கொதிக்கின்றது. உழைப்பவன் வாழ முடியவில்லை. உண்டு களிப்பவன் இன்பமாக இருக்கிறான். இந்நிலை மாற, உறங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டியெழுப்பும் சுதந்திரவீரர்கள் நாங்கள்."

இதற்கிடையில், நாடு முழுவதும் பகத்சிங்கையும், தோழர்களையும் விடுதலை செய்யக் கோரி, மக்கள் எழுந்தனர். 30.06.1929 ஆம் நாளை, பஞ்சாப் மக்கள் "பகத்சிங் தின" மாகக் கொண்டாடி, அவர் விடுதலையைக் கோரினர். 1919 ஆம் ஆண்டு படுகொலை நடந்த அதே ஜாலியன் வாலா பாக்கில், மீண்டும் 5000 மக்கள் கூடி, "புரட்சி ஓங்குக" என்றும், "பகத்சிங்கை விடுதலை செய்" என்றும் முழக்கமிட்டனர்.

அரசாங்கம் எதற்கும் காது கொடுக்கவில்லை. 1930 அக்டோபர் 7 ஆம் தேதி, பகத்சிங், ராஜ குரு, சுகதேவ் மூவருக்கும் தூக்குத்தண்டனை என்றும், தத் முதலான அறுவருக்கு ஆயுள் தண்டனை என்றும், மற்ற தோழர்களுக்கு 7 ஆண்டு, 5 ஆண்டு, 1 ஆண்டு கடுங்காவல் என்றும் நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

1931 மார்ச் 3 ஆம் தேதியிட்டு, பஞ்சாப் கவர்னருக்கு, பகத்சிங் ஒரு கடிதம் எழுதினார். "பிரிட்டிஷ் அரசை எதிர்த்து யுத்தம் நடத்தும் எங்களைத் தூக்கில் போடுவது முறையற்றது. ராணுவ வீரர்களைக் கொண்டு, முறைப்படி துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுங்கள்" என்று முறையிட்ட அந்தக் கடிதத்திற்கு, பிரிட்டிஷ் அரசு இணங்கவில்லை.

1931 மார்ச் 23 மாலை 7 மணிக்கு அந்த மாவீரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

சாவிற்கு முன்னால், பகத்சிங் சந்தோஷமாகச் சாப்பிட்ட கடைசி உணவு — ரசகுல்லா!

கடைசியாய்ப் படித்துக் கொண்டிருந்த புத்தகம் — லெனின் எழுதிய "அரசும் புரட்சியும்".

கடைசியாய், தன் தம்பி குல்தாருக்கு எழுதிய கடிதத்தின் கடைசி வரிகள்: "நாளை காலையில் மெழுகுவர்த்தியின் ஒளி மங்குவதைப் போல, நானும் காலை ஒளியில் கரைந்து மறைந்து விடுவேன். ஆனால் நம்முடைய நம்பிக்கைகள், குறிக்கோள்கள் உலகத்தைப் பிரகாசிக்கச் செய்யும்!



அம்மா, அப்பாவுக்கு ஆறுதல் கூறு!

இன்று போய் நாளை நாங்கள் மீண்டும் பிறப்போம் — எண்ணற்ற இந்நாட்டு வீரர்களின் உருவில்." முற்றும்.

— கா. வீரபாண்டியன்


•முதன் முறையாக வெளியிடுகிறோம்!
புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்!

- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- எல்லா வித அச்சக உபகரணங்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்

தொடர்புக்கு:

வேல் டைப் பௌண்ட்ரி

38, குட்டி தெரு, பெரியமேட் பேட்டை, சென்னை — 7.
தொலைபேசி: 664293

சேல்ஸ் ரெப்ரஸன்டேடிவ் — தேவை

கவர்ச்சிகரமான கமிஷன் உண்டு. விற்பனைத் துறையில் ஆர்வம் உள்ள இளைஞர்களும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். விவரங்களுக்கு;

புத்தகப் பூங்கா ('பைலட்' திரையரங்கம் அருகில்),
29, நல்லண்ண முதலி தெரு, இராயப்பேட்டை,
சென்னை — 600 014.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# பெண்ணின் பெருமை

டெல்லியில் உள்ள சர்வதேசப் பெண்கள் நல்வாழ்வுக் கழகம் இந்தியாவில் ஆராய்ச்சி செய்து திரட்டிய தகவல்களில் திடுக்கிடும் செய்திகள்.

(1) வரதட்சணை பாக்கிக்காக தற்கொலை செய்து கொண்ட பெண்களின் எண்ணிக்கை — 6414.

(2) சமையல் செய்யும் போது சேலையில் தீப்பிடித்து இறந்ததாக தெரியப்பட்ட பெண்களின் விபரம் — 4764.

(3) சமையல் செய்யும் போது ஸ்டவ் வெடித்து இறந்ததாகத் தெரியப்பட்ட பெண்களின் விபரம் — 2143.

(4) கணவன் மறுமணத்திற்குத் தானே முன்வந்து சம்மதம் எழுதிக் கொடுத்த பெண்களின் எண்ணிக்கை — 1009.

(5) திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றி — கைவிடப்பட்ட பெண்களின் எண்ணிக்கை — 8432.

(6) தூங்கும் போது கணவனால் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை — 3017.

(7) சீர்வரிசை சரிவர கொண்டுவராததால் கணவனிடம் நாத்தனார், மாமியார், மைத்துனர்களிடம் அடி உதைப்பட்ட பெண்களின் எண்ணிக்கை — 2517.

ஜெ. சலீம்பாஷா, ஹைதராபாத் — 501 507



FREE E- BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிரிவு

# ஆப்பிரிக்க மகாத்மா தான்சானியாவின் தனித் தலைவர்

## ஜூலியஸ் நியரெரெ



ரிலயன்ஸ் பதிப்பகத்தார் — சென்னை — 600 002
(நூல் கிடைக்குமிடம் — சி.எல்.எஸ். சென்னை — 600 003)

எழுதியவர்கள்:
— அ. மேரி. எம்.ஏ. எம்ஃபில்
— அ. ம. வரப்பிரசாதம். சே.ச. எம்.ஏ

ஓரளவு கல்வி, பிள்ளைகள் இளமையிலேயே மடிந்து போக மாட்டார்கள் என்ற நம்பிக்கை, மின்சக்தி இவைகளுக்கு உத்திரவாதமிருந்தால் பிறப்பு விகிதம் தானாக குறைந்து விடும்.

— நியரெரெ

இந்நூலில் மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான தான்சானியா நாட்டின் தலைவர் ஜூலியஸ் நியரெரெ என்பவரின் வாழ்க்கை வரலாறும், தான்சானியா நாட்டின் வரலாறும் இணைத்து எழுதப்பட்டுள்ளது.

நியரெரெ பற்றி அவரது மனைவியார் ''அவர் எனக்குரியவர் அன்று — தான்சானியாவிற்குச் சொந்தமானவர்'' எனக் கருதுகிறார் எனில் தான்சானியாவுடன் நியரெரெ எந்த அளவுக்கு ஒன்றிவிட்டார் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டு சொல்லத் தேவையில்லை.

FREE E- BOOKS , www.thamizham.net.,

**நியரெரெ வாழ்க்கையின் சிறப்பு அம்சங்கள்:**

(1) ஊதியத்தைக் குறைத்துக் கொண்டு எளிய வாழ்க்கை நடத்துகிறார். மாதம் சுமார் ரூ 2400 மட்டுமே ஊதியமாகப் பெறுகிறார்.

(2) நாட்டின் முன்னேற்றத்திற்கு திட்டங்கள் வகுப்பதற்கு பதவியைத் துறக்கவும் தயங்கவில்லை. டிசம்பர் 1961ல் சுதந்திர தான்சானியாவின் தலைவராக பதவியேற்ற அவர் தனது நாடும் ஆப்பிரிக்க ஒற்றுமையும் சீராக உருவெடுக்க உஜமா சோசலிசத்தினைப் பற்றிய கொள்கைத் திட்டத்தினை உருவாக்குவதற்காக ஜனவரி 1962ல் பதவி துறந்து 11 மாதங்கள் பதவி எதுவுமின்றி இருந்தார். இந்நிலையினை இன்றைய உலக அரசியல் கண்ணோட்டத்தில் நோக்குவோமாயின் வியப்படையாமல் இருக்க முடியாது.

**தான்சானியாவின் முன்னேற்றத்திற்காக நியரெரெ பிப்ரவரி 1967ல் வெளியிட்ட உஜமா சோஷலிஸம் பற்றி:**

**உஜமா சோஷலிஸத்தின் நோக்கங்கள்**

(1) மனித மதிப்பு, மனித உழைப்பு மற்றும், நியாயமான பங்கீடு. (2) தான்சானியக் குடியானவர்கள் தங்கள் சொந்த முயற்சியின் நல்விளைவுகளை தாங்களே கண்டு தன்னம்பிக்கையில் வளர்ச்சி பெற வேண்டும். (3) அவர்கள் நாட்டின் ஆட்சி முறைகளில் பங்குபெற்று அனைவரும் ஒரு நாட்டின் மக்கள் என்ற உணர்வில் பெருமை கொள்ள வேண்டும். (4) நாட்டு புற மக்கள் பெரும் எண்ணிக்கையில் நகரங்கட்குக் குடிபெயர்வதினால் ஏற்படும் பல தீமைகளைத் தான்சினியா நீக்க அல்லது குறைக்க வேண்டும். (5) நகர வாசிகட்கும் நாட்டுப் புற மக்கட்கிடையே எழும் பொருளாதாரப் பிளவுகளைக் குறைக்க வேண்டும் (இவைகள் நமது நாட்டிற்கும் பொருந்தும்). (6) வன்முறைக் கலக்காத (புறத்தூண்டுதல் இல்லாத) கூட்டு உழைப்பு முறை (உடல் வலிமையுடைய அனைவரும் 3 நாட்கள் பொது நிலத்தில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

உழைக்க வேண்டும்). (7) விளம்பரத்தால் மனிதனுக்குப் போலித் தேவைகளை உற்பத்தி செய்து பணம் பறித்து ஒரு சிலரது பைகளை நிரப்பும் முயற்சி தவிர்க்கப்படுதல்.

### தான்சானியாவின் (நியரெரெயின்) புதிய கல்விமுறை

எட்டுவயதில் கல்வி கற்க துவங்க வேண்டும். உழைத்துக் கொண்டே படிக்க வேண்டும். இதனால் மாணவர்களே அவர்களது சுய தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். கிராமப்புறத்தில் தொடர்ந்து வாழவும் உற்பத்தியை பெருக்க உதவும் வகையிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்விப்பயிற்சி அமைந்துள்ளது. 15 வயதில் கல்விப் பயிற்சி முற்றுப் பெறுகிறது. சுருங்கக் கூறின் தனது சொந்த திறமைகளைச் சார்ந்து வாழ்வதற்கென அளிக்கப்படும் பயிற்சியே கல்வியாகிறது.

இதன் மாறாக தன்னம்பிக்கை, சமத்துவம், உழைப்பின் மீது மதிப்பு, நாட்டுப்புற வாழ்வில் பற்று தனிச் சொத்துடமை வளர்ச்சி தவிர்க்கப்படுதல் ஆகிய நற்பலன்கள் ஏற்பட்டுள்ளன.

### புகழாரம்

கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாடில், ஆங்கில நாடக மன்னர் ஷேக்ஸ்பியர், அமெரிக்க அரசியல்வாதி லிங்கன், சமூகப் புரட்சிக்கு வித்திட்ட மார்க்ஸ், பிரஞ்சு விஞ்ஞானி டெயார் ஆகியோரின் வானளாவிய கருத்துக்களையும், மனித ஏக்கங்களையும், மனித முயற்சிகளையும் சீர்தூக்கி பார்த்து, வடிகட்டி, பருகி, தனது ஆளுமையை உருவாக்கிக் கொண்டவர் நியரெரெ.

— 'வெங்கட் — மோகன்'

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இன்லேண்ட் லெட்டர்

நா. தென்னிலவன்



अस्पृश्यता ईश्वर और मानवता के प्रति अपराध है।

UNTOUCHABILITY IS A CRIME AGA[illegible]D AND MAN

திருப்பிடித்த சைக்கிள் அதே கலரில் யூனிஃபாரம் கையில் பத்துப் பதினைந்து தபால்கள். மணியார்டர்கள. போஸ்ட்மேன், குடிசைகள் நிரம்பிய பகுதியை அடைந்தான். மண் சாலையில் புழுதிமயம். தார் ரோட்டை கிராமங்களுக்கு அறிமுகப் படுத்த அரசு விரும்பவில்லை போலும்.

''வேலாயி''. வேலாயி வெளியே வந்தாள். கலைந்த முடியை முடிந்தாள். தேங்காய் எண்ணெய் லிட்டர் ரெண்டு ரூபாய்க்கு விற்றபோது எண்ணெய் தடவிய தலை...

''பட்டணம் போனாரே... உன் புருஷன் அவரு பணம் அனுப்பியிருக்காரு.''



கையக காட்டு. ரேகை வைக்கணும்.'' அவளது பெருவிரலில் பேனா மையைத் தடவினான். அவளது விரல் ரேகைகள் மணியார்டரில் கையெழுத்திட்டது...

அப்போது அங்கு பிரவேசித்த பெரிய மனுஷத் தோரணையில் இருந்தவன் கையை வெடுக்கென்று பிடுங்கினான்.

''எலே அவ தாழ்ந்த ஜாதிடா! அவள நீ எப்படித் தொடலாம்? ராஸ்கல். டவுன்ல போஸ்ட் மாஸ்டர் கிட்ட சொல்லி உன்னை சீட்டுக் கிழிக்கச் சொல்றேன். ஏண்டி.... அவன் தான் தெரியாத்

FREE E- BOOKS , www.thamizham.net.,

தனமா ஏதோ செஞ்சுட்டான்னா நீ எப்படி தொட விட்ட...?'' அவன் வாயிலிருந்து கூவம் வாடையில் வார்த்தைகள் வெளியேறியன.

''இனி நீ என்ன தொடக் கூடாது. இன்னிக்கு எனக்கு ஏதாவது கடுதாசி வந்துச்சா?''

''வந்துதுய்யா... ஒரே ஒரு லெட்டர்.''

''என் மேல உன் கைபடாம லட்டர அந்த மேட மேல வை.''

வைத்தான். இது இன்லண்ட் லட்டர். அதில் காந்தியின் உருவப்படம் பொறிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் இந்தியிலும் ஆங்கிலத்திலும்... ●●


சென்னை புறநகர் பகுதியில் மிக குறைந்த விலையில் வீடுகள், வீட்டுமனைகள் விற்பனைக்கு உள்ளன. எங்களுக்கு எழுதுங்கள்.


'வெங்கட்'
24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம்,
அம்பத்தூர், சென்னை — 600 053.


## அறிவிப்பு

எந்த ஐயத்திற்கும் பதில் கூறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களையும், சில நேரம் காலம் தாழ்வதால் வாசகர்களுக்கு ஏற்படும் சிரமங்களையும் கருத்தில் கொண்டு, இப்பகுதியை இனி நிறுத்துவதென்று ஆசிரியர் குழு முடிவு செய்துள்ளது. எனவே, இப்பகுதியைத் தொடர இயலாமைக்கு வருந்துகிறோம்!

- ஆ.கு.

FREE E- BOOKS , www.thamizham.net.,



நம்பிக்கை வை
தோழனே!

செப்பனிட
உன்னால் முடியும்!
உடைந்து போன
இந்த லாரியை
மட்டுமல்ல
உன் வாழ்வையும்!

-சுப. வீ.

FREE E- BOOKS , www.thamizham.net ,

# 'சுட்டி'யைப் பற்றி...!

மாதந்தோறும் முதல் தேதியன்று தவறாது வெளிவரும் சுட்டி நான்கு வருடங்களாகப் பிரசுரமாகிறது.

வணிகப் பத்திரிகைகள் பலவற்றினது உண்மைத் தன்மையையும் "மசாலாப் பத்திரிகைகள்" என்ற தலைப்பில் சுட்டி வெளியிட்டு வாசகர்களைப் பெரிதும் ஈர்த்தது. அதே போல் பிரசித்தி பெற்ற எழுத்தாளர்கள் பற்றியும் எழுதியது. சினிமா உலகப் பிரமுகர்கள் பற்றி கட்டுரைத் தொடர்கள் இதில் வெளிவந்துள்ளன. சமூக, அரசியல் துறைகளில் மலிந்து விட்ட ஊழல்கள், குறைபாடுகள் பற்றி சிறு சிறு கட்டுரைகளும் தகவல்களும் வருகின்றன. கிண்டலும், பரிகாசமும் கலந்த கவிதைகள், குறிப்புக்கள் சுட்டியில் அதிகம் காணப்படும். வீட்டு வைத்தியம், மனித உடல் உறுப்புக்கள் பற்றிய மேலோட்டமான கட்டுரைகள், புத்தகங்கள் பற்றிய செய்திகள் தொடர்ந்து வருகின்றன.

வரவர 'சுட்டி' துணுக்குகள் — பிற பத்திரிகைகளிலிருந்து 'நன்றி' யுடன் எடுத்து பிரசுரிக்கும் புதுமையான, ரசமான, சூடான, சுவையான தகவல்கள் முதலியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது தெரிகிறது. சாதாரணமான கதைகளும் சுட்டியில் வெளிவரும்.

ஆரம்ப காலத்தில் 'சுட்டி'யின் துணிச்சலானப் போக்கினால் தாக்கம் பெற்ற இளைஞர்கள், தமிழகத்தில் வெவ்வேறு பகுதிகளில் சுட்டி மாதிரி பத்திரிகைகள் தொடங்குவதில் முனைப்புக் கொண்டார்கள்.

— வல்லிக்கண்ணன்

— நன்றி: 'தீபம்', ஜனவரி 1985

எடுத்தெழுதியவர்: ந.க. துறைவன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

சோலை. இசைக்குயில், ஜோலார்பேட்டை வ.ஆ.

'இரண்டு துருவங்கள்' சிறுகதை பெண்ணுரிமை பற்றி இன்றையப் பெண்களின் கணிப்பைத் தெளிவாகக் காட்டியது. 'நாய்களோடு நாங்களும்...' கருத்து(ம்) படமும் சிறப்பாக இருந்தது. பாராட்டுகள்.

கு. கந்தசாமி, நெகமம் — 638 212

தங்களின் ஜூன் 85' இதழில், புத்தகப் பிழிவுப் பகுதியில் வந்த 'ஆன்ம ஓவியம்' பற்றிய விமர்சனம் சிறப்பாக இருந்தது.

எம்.ஜி. சாந்தி, போடி நாயக்கனூர்.

எரியும் பிரச்சனை, தூங்கும் அரசியல்வாதிகளை உசுப்பிவிடுமா?

பொ. கா. இளமாறன், சென்னை — 39

'நர்ஸரி பள்ளி' அட்டைப்படம் அருமை. அதிலும் புதுமை பிச்சைக்காரர்களும், திருடர்களும் சேர்ந்து நடத்துகிற அளவுக்கு அரசு விட்டுவிட்டதே!

ப. மூர்த்தி, பெங்களூர் 560 021.

அறிஞர் அண்ணாவைப் பற்றி விமர்சனக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. முதலில் அவரை முழுமையாக புரிந்து கொண்டு, படித்துத் தெரிந்து கொண்டு எழுதுவது சிறப்பென்று கருதுகிறேன்.

இரா. வேலுச்சாமி.

அண்ணா பற்றிய கூர்ய விமர்சனம் காலத்தின் நியாயத் தேவை.

எஸ்.ஜி. நாகராஜ், சத்யமங்கலம் — 638 401

எனக்குபெரிய ஏமாற்றம்... சிறுகதைகள் இரண்டை காணவில்லை. ஏன் 102 சிறுகதைகளும் சரியில்லையா...?

FREE E- BOOKS , www.thamizham.net.,


ஒரு கால கட்டத்தில் இந்தியாவிலேயே முதல் தரமாகக் கருதப்பட்ட நம் சென்னைப் பல்கலைக் கழகம் இன்று மைசூர், ஆந்திர பல்கலைக் கழகங்களை விட கேவலமாகக் கெட்டுக் குட்டிச்சுவராகி நிற்கிறது.

சிறப்பாகத் தேர்வு எழுதிய மாணவர்கூட மதிப்பெண் பட்டியல் தங்கள் கைக்கு வரும்வரை வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு பயந்து கொண்டிருக்கின்ற ஒரு வேதனையான சூழ்நிலை!

சிறப்பாகத் தேர்வு எழுதியவர்களுக்கு குறைவாக மதிப்பெண் போடுவது — மட்டரகமாக எழுதியவர்களுக்கு அதிக மார்க் போடுவது — மதிப்பெண்களுக்கு பதில் பட்டியலில் குறியீடுகள் இடுவது — இவற்றிற்கெல்லாம் ஒரு படி மேல் சென்று மதிப்பெண் பட்டியலே அனுப்பாமல் இருப்பது போன்ற பல கேலிக்கூத்தான செயல்களை பலர் பல முறை சுட்டிக் காட்டியும் எருமை மாதிரி சுரணை இல்லாமல் இருக்கிறது இப்பல்கலைக் கழகம்.

மறு மதிப்பீடு முறையை அடியோடு ஒழித்துக் கட்டி மாணவ சமுகத்துக்கே அநீதி இழைத்த இப்பல்கலைக்கழகம் மாணவர்களை திருப்திப்படுத்த "ரீ டோட்டலிங்" என்கிற முறையை மட்டும் இன்னும் வைத்திருக்கிறது. இதன் மூலம் பயன் பெற்றவர்கள் என்று ஓரிருவரைக் கூட உதாரணத்திற்கு காட்ட முடியாது.

பணம் கட்டியவர்களுக்கு "உங்கள் மதிப்பெண் சரியாகவே கூட்டி இடப்பட்டுள்ளது" என்ற மாமூலான பதிலை 2, 3 செமஸ்டர்களுக்குள்ளாவது தந்துவிடும்.




FREE E- BOOKS , www.thamizham.net.,

கடந்த மாதம் நடைபெற்ற தேர்வில், சில கல்லூரிகளில், சில மாணவர்களுக்கு, சில குறிப்பிட்ட பரிட்சைக்கு ''ரிஜிஸ்டர் நம்பரையே'' தனது பட்டியலில் இப்பல்கலைக் கழகம் குறிப்பிட தவறிவிட்டது. இத்தனைக்கும் இவர்கள் தேர்வுக்கட்டணம் செலுத்தி ஹால் டிக்கெட்டும் பெற்றவர்கள் தான்.

சென்னை வைணவக் கல்லூரியில் இது போல் ரிஜிஸ்டர் நம்பர் வராத மாணவர்கள் திண்டாட நேரிட்டது. இச்சில மாணவர்களுக்கு நிர்வாகம் உடனடி மாற்று விசேஷ ஏற்பாடு களை செய்து அவர்களைத் தேர்வு எழுத வைத்தது.

தேர்வுக்கு முன் சில தினங்கள் முன்பாக, பணம் கொடுத்து பாஸாவது பற்றி கல்லூரி மாணவர்கள் பரவலாக பேசுவது இங்கு சகஜமாக இருக்கிறது. இது பற்றி சென்னைக் கல்லூரி ஒன்றில் பயிலும் மாணவர் ஒருவரை கேட்டபோது ''ஒவ்வொரு செமஸ்டரிலும் மாணவர்கள் தங்களுக்கு தெரிந்த சில பேராசிரியர்களிடம் இப்படி இரகசியமாக பணம் கொடுத்து பாஸாவதும் அதிக மதிப்பெண் பெறுவதும் வாடிக்கையாகிவிட்டது'' என்று சர்வ சகஜமாக சொன்னபோது நாம் அதிர்ச்சியடைந்தோம். அதோடு மேஜர் பேப்பர் ஒன்றிற்கு 600 ரூபாய் என்றும் மற்ற தாள்களுக்கு ரூ 400 தான் என்றும் விரல் நுனியில் தொகையையும் அவர் குறிப்பிட்டார். நாம் மேலும் அதிர்ச்சியுற்றோம்.

இந்த ஆதாரமில்லாத விஷயம் உண்மை தானா என்பதையறிய அனுபவமிக்க மூத்த தனியார் கல்லூரி பேராசிரியர் ஒருவரை அணுகி கேட்டபோது ''இந்த விஷயத்தில் ஓரளவிற்கு உண்மை இருக்கத் தான் செய்கிறது. ஆனால் எல்லா பேராசிரியர்களையும் நான் குறிப்பிட வில்லை'' என்று நாசுக்காக உண்மையை ஒப்புக் கொண்டார்.

நம் பல்கலைக் கழகத்தின் எல்லா மட்டங்களிலும் ஊழல் தலை விரித்தாடுகிறது. அதில் இதுவும் ஒன்று என்று வேதனைப் படுவதை தவிர வேறு வழியில்லை.

— சீ. இரகுராமன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது வெள்ளரிக்காய் மருத்துவம்

★ வெள்ளரியில் மிகுந்துள்ள நீர்ச்சத்து, கடும் நாவறட்சியை விரட்டுவதோடு, பசியையும் உண்டாக்கும். உடலைக் குளிர வைக்கும்.

★ வெள்ளரியில் வைட்டமின்கள் ஏதுமில்லை. ஆனால் தாதுப் பொருள் மிகுந்துள்ள சோடியம், கால்சியம், மக்னேசியம், இரும்பு, பாஸ்பரஸ், கந்தகம், சிலிகன், குளோரின் — இத்தனையும் வெள்ளரியில் உண்டு. இவற்றை விட, நம் இரத்தத்தில் சிவப்பணுக்களை உருவாக்கும் "பொட்டாசியம்" வெள்ளரியில் மிகுதி.

★ ஈரல், கல்லீரல் இவற்றில் சூட்டைத் தணிக்கும் ஆற்றல் வெள்ளரிக்கு இருப்பதால், அப்பாகங்களில் ஏற்படும் நோய் தணியும்! செரிமானம் தீவிரமாகும்; பசி அதிகரிக்கும். வெள்ளரிக்காயை உண்ணுகையில் பசிரசம் என்றும் விசேஷ ஜீரண நீர் சுரக்கிறது என்பதும் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு. மலத்தைக் கட்டும்; பித்தத்தைக் குறைக்கும்.

★ உள்ளரிப்பு, கரப்பான் போன்ற சரும நோய்களைப் போக்கும் ஆற்றல் வெள்ளரிக்கு உண்டு.

★ வெள்ளரிப் பிஞ்சை உட்கொண்டால் திரிதோஷமும் போகும் என்று பழைய வைத்திய நூல்கள் பேசுகின்றன.

★ புகைப்பிடிப்போரின் குடலை நிகோடின் நஞ்சு சீரழிக்கிறது. நஞ்சை நீக்கும் அற்புத ஆற்றல் வெள்ளரிக்காய்க்கு உண்டு.

★ மூளைக்கு மிகச்சிறந்த வலிமை தரக்கூடியது வெள்ளரி. மூளை வேலை அதிகம் செய்து கபாலம் சூடு அடைந்தவர்களுக்கு குளிர்ச்சியும், மூளைக்குப் புத்துணர்ச்சியும் வெள்ளரிக்காய் வழங்கும்.

★ நுரையீரல் கோளாறுகள், கபம் — இருமல் உள்ளவர்கள் வெள்ளரியைச் சாப்பிடுவது நல்லதல்ல.

சித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# அண்ணா 4 என்கிற மனிதர்

அரசியல் கொள்கை: 3

உலகாண்ட ஆங்கில ஏகாதிபத்தியத்தை அசைத்த கட்சியும், அகிம்சாமூர்த்தி மகாத்மா காந்தியடிகள் போற்றி வளர்த்த கட்சியுமாகிய காங்கிரஸ் கட்சியை, முதல் முறையாக 1967 ல் தமிழகத்தில் புறங்காண வைத்தது சிந்தனைக்குரிய சாதனையாகும்.

தி.மு.க. கட்சி தொடங்கி சுமார் 18 ஆண்டுகளில் தமிழக அரியணையை அண்ணாதுரை கைப்பற்றினார். முன்பு குறிப்பிட்ட காரணங்களோடு, அப்போது காங்கிரஸ் கட்சியில் நிலவிய உணவு பிரச்சனையும், தி.மு.க — ஆட்சி பீடமேற வழி வகுத்தது. கடும் விலைவாசி உயர்வும் உணவு நெருக்கடியுமான நிலைமையைப் பயன்படுத்தி, அண்ணாதுரை தாராளமாக வாக்குறுதியை வீசினார். அதில் முக்கியமானது ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவதாக வாக்களித்தது! இது எப்படி சாத்தியமாகும் என்று நெருக்கடிகளில் நிலைகுலைந்திருந்த பொதுமக்கள் சிந்திக்கவில்லையென்றாலும், பெரியார், "படியைப் பாட்டிலில் போட்டா அளப்பீர்கள்" என்று நையாண்டி செய்தார்.

இதற்குக் கோவை தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அண்ணா பதிலாக: "பெரியார் மழைக்குக் கூட பள்ளியில் ஒதுங்கியவர் அல்லர். பொருளாதாரத்தில் எம்.ஏ. படித்த நான் சொல்கிறேன்... 1967 இல் எங்களிடம் ஆட்சியைக் கொடுங்கள். ரூபாய்க்கு 3 படி அரிசி போடாவிட்டால் 'மூடனே, முட்டாளே, மூர்க்கனே! மூன்று படி போடுவதாகச் சொன்னாயே, ஏன் போடவில்லை' என்று கேட்டு கையைப் பிடித்து இழுத்து வந்து முச்சந்தியிலே நிறுத்தி குதிரைச் சவுக்கால் அடியுங்கள்" என்றார்.

இந்த ஆவேச வாக்குறுதியே அவர் வெற்றி பெற முக்கிய காரணங்களில் ஒன்றாகும். பொருளாதாரம் படித்த அண்ணாவுக்கு இது சாத்தியமில்லையென்று தெரிந்தும்,

FREE E- BOOKS , www.thamizham.net.,

மக்களுக்கு இப்படியோர் வாக்குறுதி தந்ததும் அதை நிறை வேற்றமுடியாமல் போனதும், அவரை நேர்மையான அரசியல் வாதி என்று ஏற்றுக் கொள்ள முடியாமல் போகிறது.)

'ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப்படும்' என்று வெற்றி பெற்ற பின் மே 67 இல் அதே கோவையில் அண்ணா பேசினார். கோவையிலிருந்து அண்ணா சென்னை திரும்பிய போது உணவுத் துறை செயலாளர் 3 மாதம் விடுமுறை எடுத்துக் கொண்டு போய் விட்டார். காரணம் கேட்ட போது, "நம்முடைய அரசின் வருவாய் ரூ 220 கோடி இந்த மொத்த ரூபாயையும் செலவிட்டால் கூட நீங்கள் சொல்லுகிறபடி அரிசி போட முடியாது அதனால் தான் லீவு போட்டேன். என்னை விட்டு விடுங்கள்" என்று போய் விட்டார்.



வேறு வழியின்றி அண்ணா கோவைக்கும், சென்னைக்கும் மட்டும் படி அரிசி போட்டார். அதுவும் ரூ.1.06க்குத் தான்! மூன்று படி அரிசி ஏன் போடவில்லையென்று யாரும் கேட்க வில்லை. திராவிட நாடு போன்ற பிற கொள்கைகளைப் பறக்க விட்டபோதும் எப்படி இந்த மக்களிடம் செல்வாக்கு குறைய வில்லையோ, அப்படியே இப்போதும் ஒன்றும் ஆகிவிடாது என்ற அண்ணாவின் கணிப்பு தவறவில்லை.

எல்லா தரப்பினரையும், தட்டிக் கொடுத்து சமரசம் செய்து கொள்வதே தமிழ்நாட்டில், எந்தத் தவறையும் மறக்கடிக்கும்; மன்னிக்கச் செய்யும். காலங்காலமாக இங்கு நிலவும் இந்தக் கலாச்சார வசதியை அண்ணா புரிந்து கொண்டு பயன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

படுத்தினார்.

"விஷக்கிருமிகள் புகுந்துவிட்டன" என்று தி.மு.க. ஆட்சியேற்பை வருணித்த திரு. பக்தவச்சலத்திடமே, ஆட்சியேற்ற பின் ஆலோசனைகள் கேட்டார். பதவிப் பிரமாணம் எடுத்த நாள் மாலையே தலைமைச் செயலக ஊழியர் கூட்டத்தில் பேசிய போது, தானே குமாஸ்தாவாக வாழ்க்கையைத் தொடங்கியது பற்றியும், குறைந்த வருமானமுடைய சர்க்கார் ஊழியர்களின் பிரச்சனைகளைத் தான் உணர்ந்திருப்பது பற்றியும் சொல்லி அவர்களைக் கவர்ந்தார்.

ஆனால் அவருடைய ஆட்சியில் குறைந்த வருமானமுடையவர்கள் தொடர்ந்து குறைந்த வருமானத்தில் தான் இருந்தார்கள்!

கடந்த கால் நூற்றாண்டாக அண்ணாதுரை மேடையில் முழங்கியும், எழுத்தில் எழுதியும் வந்த சீர்திருத்தங்களைக் கவனித்தவர்களுக்கு, அவர் ஆட்சியேற்றவுடன், தமிழகத்தில் மாபெரும் புரட்சிகர சமூக மாற்றமே ஏற்பட்டுவிடும் என்று தோன்றும். அவர் ஆட்சியேற்றவுடன் மாபெரும் எதிர்பார்ப்புகளுடன் "இருட்கடலில் ஆழ்ந்திருந்த தமிழகத்தை உதயசூரியனின் ஒளிக்கரம் தழுவியது. புதுயுகம் தோன்றிவிட்டது. பொற்காலம் உதயமாகிவிட்டது" என்று சில ஏடுகள் குதூகலித்து முழங்கின.

(இன்னும் சொல்லப் போனால், நாட்டில் காங்கிரசல்லாத ஒரு கட்சி, தன் பலத்தையே நம்பி, தனிப்பட்ட முறையில் ஒரு மாநில நிர்வாகப் பொறுப்பை ஏற்றது அப்போது தமிழகத்தில் மட்டும் தான். எனவே எவ்வித நிர்பந்தமும் இன்றி வாக்குறுதிகளையும், கொள்கைகளையும் நிறைவேற்றியிருக்க முடியும்.)

(அவரை அடுத்து ஆட்சியேற்ற இரு முதல்வர்களின் காலங்களை விட அண்ணாதுரையின் காலத்தில் லஞ்ச ஊழல் குறைவாக இருந்தது என்பதைத் தவிர, வேறு தலைகீழ் மாற்றங்கள், எதுவும் பெரிய அளவில் நடைமுறைப்படுத்தப் படவில்லை.) கீழ்க்கண்ட சாதனைகள் அவர் புரிந்ததாக,

FREE E- BOOKS , www.thamizham.net.,



"தனி நபர் வழிபாடு — இலஞ்சத்துக்கும் ஊழலுக்கும் இடந்தந்துவிடும். புகழ்ச்சி யிலும் துதியிலும் மயங்காத மனிதரே கிடையாது. மயக்கமே தவறுகளுக்கு இடந் தந்துவிடும்"

— அண்ணாதுரை

(அவரது ஆதரவாளர்கள் பட்டியல் போடுவதுண்டு. (1) கலப்பு மணம் புரிவோர்க்குத் தங்கப் பதக்கம் (2) சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகும் சட்டம் (3) சீரணிப்படை அமைத்தல் (4) இருமொழிக் கொள்கை அமுல் படுத்தல் (5) மதுவிலக்குத் திட்டம் தீவிரப்படுத்தல் (6) உழவுத் தொழில் வளர்ச்சிக்கு நவீன செயல் முறைகள்.)

ஒரு யுகப்புருஷரால், சாமான்யர்களின் நிகரற்ற தலைவராக பிரபலப்படுத்தப்படும் அண்ணா அவர்களிடமிருந்து தமிழ்நாடு இதைவிட இன்னும் ஆக்கப்பூர்வமாக எதிர் பார்த்தது. ஆனால் இந்த சாதனைகள் பலவும் கூட நடைமுறையில் பலவீனமாகவே நலிந்திருந்தன.

பேச்சில், எழுத்தில் காட்டிய அழுத்தம், வேகம் அவர் ஆட்சியில் அறவே இல்லை என்பதை அவரது ஆதரவாளர் களே ஒப்புக் கொள்வார்கள். பழகுவதற்கு அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், மாற்றுக் கட்சியினருக்கும் கூட நல்லவர் தான். ஆனால், செயல்படுவதில் அவர் வல்லவரா என்பதை அவர் காலத்தில் தேங்கி நின்ற கோப்புகளும், முக்கிய நடவடிக்கைகள் எடுக்க காட்டி வந்த தயக்கமும் சந்தேகிக்க வைக்கிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

(அண்ணா முதலமைச்சராய் இருந்த காலம் முழுவதும் அரசின் தலைமைச் செயலாளராக இருந்த சி.ஏ. இராம கிருஷ்ணன் குறிப்பிடுகிறார்: "தவறிழைத்த சர்க்கார் ஊழியர்களைத் தண்டிக்கும் நிலை ஏற்பட்டால் அப்போது நீதியின் கடுமையை இரக்கத்தினால் தணித்துவிடுவார்")

(அண்ணா சாகும் வரை 700 நாட்கள் முதலமைச்சராக இருந்தார். அந்தக் காலம் முழுவதும் எல்லாத் தரப்பினருக்கும் நல்லவராக விளங்குவதில் கவனம் செலுத்தினார். தவறுகளை, அநீதிகளை சுட்டெரிக்கத் தேவையான சினமிக்க செயல் வேகம் அவருக்கு ஏற்பட்டதில்லை. அதுவே அவரது புகழுக்கு பலமாகவும், நாட்டுக்கு பலவீனமாகவும் அமைந்தது.)

— தொடரும்

(அடுத்து அண்ணா என்கிற பேச்சாளர்)

— எழில்



காவலர்: என்ன சார் புகார்?

புகார் கொடுக்க வந்தவர்: சார்... நான் பேங்கிலிருந்து ஒரு ரூபாய்களாக 100 ரூபாய்க்கு சில்லரை கொண்டு வரும் போது ஒருத்தன் கத்தியை காட்டி சில்லரையை பிடுங்கிட்டு 100 ரூபாய் நோட்டை கொடுத்திட்டு ஓடிட்டான் சார். என்னோட சில்லரையை நீங்க தான் சார் எப்படியாவது மீட்டு தரணும்.

மூர்த்தி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நன்கொடை கொண்டு வா!





எண்ணூர் அன்னை சிவகாமி நகர் பர்மா அகதிகள் குடியிருப்பு ஆகும். இங்கு அரசினர் உயர்நிலைப்பள்ளி துவக்குவதற்காக கட்டிட வசதி செய்யப்பட்டு கடந்த 5 ஆண்டுகளாக பூட்டிக் கிடக்கிறது.

குடியிருப்பு வாசிகளை விசாரித்த பொழுது கிடைத்த தகவல்கள்:

அரசு உயர்நிலைப்பள்ளி துவக்கப்பட ரூ.22,500 பொது மக்கள் நன்கொடையாக அரசுக்கு செலுத்தல் வேண்டும்.

குடியிருப்பு வாசிகளில் பெரும்பான்மையானவர்கள் அன்றாடக்கூலிகள், ஏழை அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்களாவார்கள். அவர்களது அன்றாடச் சாப்பாட்டு பிரச்னையே தீர்க்கக்கூட சக்தியற்றவர்கள் எப்படிப் பொதுமக்கள் நன்கொடை திரட்டி அரசுக்குச் செலுத்தமுடியும்?

எம்.எல்.ஏ., எம்.பி. பிரமுகர்கள் தேர்தல் காலத்தில் மெயின் ரோடில் நின்று வாக்கு சேகரித்ததோடு தங்களது கடமை முடிந்துவிட்டது என்ற நிலையில், குடியிருப்பு வாசிகள் இவர்களைப் பலமுறை சந்தித்து பள்ளிக்கூடத்திற்கு வழி செய்யுமாறு கோரும் போதெல்லாம் 'பணம் கொண்டு வாருங்கள். பார்க்கலாம் என்கிற பதிலைச் சொல்லி வருகின்றனராம்.

இந்நிலை மாற அரசு தனது பழைய நிபந்தனையான 'பொது மக்கள் நன்கொடை வழங்க வேண்டும்' என்கிற விதிக்கு விலக்களித்து ஏழ்மை நிலையில் வாழும் பர்மா அகதி குடியிருப்பு வாசிகளுக்கு உயர்நிலைப்பள்ளி வசதி கிடைக்க உதவ வேண்டும்.

— 'வெங்கட் — மோகன்'

FREE E- BOOKS , www.thamizham.net.,

# "வாசகர்களின் வயிற்றிலடிக்கும் பத்திரிகைகள்"

வாசகனின் வாழ்க்கையே
எங்கள் வாழ்க்கை
வாசகனின் வாசிப்பே
எங்கள் சுவாசிப்பு"

என்றெல்லாம் வார்த்தை ஜாலம் காட்டி வாராவாரம் வாசகனை ஏமாற்றி தங்கள் பிழைப்பை நடத்தும் சில பத்திரிகைகள்... இப்போது "பக்கத்துக்குப் பக்கம்" பரிசு மழை பொழிவதாக பல்வேறு போட்டிகளை அறிவித்து அழைக்கின்றன.

ஆர்வமுடன் கலந்து கொள்வான் நமது வாசகன். போட்டி நடக்கிறதா? முடிவு வருகிறதா? பரிசு கிடைக்கிறதா?

ஊருக்கு உபதேசம் வழங்கும் ஒரு பிரபல வார இதழ் 82இல் ஒரு சிறுகதைப் போட்டி வைத்தது. போட்டியே நடக்கவில்லை.

சன்மானம் பற்றிக் கேட்கவே வேண்டாம்!

"ஹி... ஹி... ஆபீசுக்கு வாங்க... வவுச்சர் போட்டு வாங்கிக்கலாம்" என்பார் எடிட்டர். லோ லோ என்று அலைய வேண்டியது தான் மிஞ்சும். வவுச்சரும் வராது... சன்மானமும் வராது.

— நமது மேட்டர்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள தபால் தலை வைத்து அனுப்புகிறோமே திரும்பியாவது வருகிறதா? வரவே வராது.

என் சொந்த அனுபவத்தில் இதய சுத்தியான ஒரு பத்திரிகைக்கு அனுப்பி திரும்பியே வராத கதைகள் 3, கவிதைகள் 2 இன்னும் சில பத்திரிகைகள் இருக்கின்றன.

– வழிப்போக்கன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# குற்றவியல் சட்டம்

மணம் முடிந்த ஏழு ஆண்டுகளுக்குள் ஒரு பெண்ணின் இறப்புக் குறித்து சந்தேகங்கள் எழுந்தால் அல்லல் படும்! பெண்ணின் குடும்பத்தாரின் நெருங்கிய உறவினர்கள் கட்டாய நீதி விசாரணைக்கு கொண்டு வர ஏற்பாடு செய்யலாம் என்ற சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன் பின்னணி காவல் துறையின் அலட்சிய போக்கு அல்லது வேலியே பயிரை மேய்ந்தது என்னும் ஒழுக்கமற்ற நிலை. மேற்படி வரதட்சணை கொடுமையால் ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டாலோ, அல்லது அவ்வாறு செய்து கொள்ள தூண்டப்பட்டாலோ, குற்றம் நிரூபிக்கப்படும் நிலையில், காரணமான கணவன், அல்லது அவனது உறவினர்களுக்கு இரண்டாண்டு சிறை தண்டனையும் ரூ.10,000 அல்லது அளிக்கப்பட்ட வரதட்சணை மதிப்பு இதில் எது அதிகமோ அது அபராதமாக விதிக்கப்படும். இவ்வாறான வரதட்சணைக் கொடுமைச் சாவுகளில் காவல் துறையினர் சேகரிக்கும் சாட்சியங்களின் குறைகளால் பலபேர் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளா வண்ணம் மாதர் சங்கங்கள் உதவி செய்யலாம் என்னும் வேண்டுகோளை நான்காண்டுகளுக்கு முன் மத்திய அரசு எல்லா மாநில அரசுகளுக்கும் விடுத்தது. தமிழ்நாடு உட்பட பெரும்பான்மையான அரசுகள் மாவட்ட மாதர் சங்க ஆலோசனை குழுக்களை அமைக்கத் தவறி விட்டன. மேலும் குடும்ப நீதி மன்றங்கள், சட்டங்கள், தீர்ப்பின் மீது அப்பீல் செய்யும் உரிமை இவையத்தனையும் இருப்பினும் சட்ட அமைப்பு முறையாக இல்லை. இதில் காணப்படும் குறைகள் தற்செயலானவை அல்ல. பத்தாம் பசலிகள். அதிகார வர்க்கக் கும்பல், பிற்போக்கு வாதிகள் இவர்களின் வற்புறுத்தலுக்கு மத்திய அரசு பணிந்து விட்டது என்பதே குறிப்பிடத்தககது.

— நன்றி: பெண்களும் சட்டமும்

— தகவல்: ம. செல்வராஜன்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சுகமடைய!

ஆஸ்துமா, எஸ்னோபீலியா, நரம்புத்தளர்ச்சி, சர்ம நோய், மூட்டுவலி, மாதவிடாய் கோளாறுகள் மற்றும் எவ்வகை பெரிய நோய்களும் மிக விரைவில் சுகமடைய மூலிகை சிகிச்சை பெற இலவச கடித ஆலோசனை பெறலாம்.

முகவரி:

## ஞானோதய தெய்வீக மூலிகை வைத்தியர்

Dr. C.K. மாணிக்கவாசகம், செலந்தம்பள்ளி P.O.,
திருப்பத்தூர், TK, (N.A.) - 635653.

PHONE
469 TPT

அறிவிப்பு: சென்னை, பெங்களூர், வேலூர், சேலம், திருச்சி, கோவை, மதுரை, திருப்பத்தூர் ஆகிய முகாம்களில் சந்திக்க Reply card-ல் எழுதுங்கள்

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும் "சுட்டி"
1494, அண்ணாநகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்

சுட்டி முன் இதழ்கள் எண் 1 முதல் 17, 19, 21, 22, 26, 30 தவிர மற்ற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50வது இதழ் 0.75 காசு மற்ற இதழுக்கு 45 காசு விதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப் படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பலாம்.

## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறா சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை

வடுகவிருட்சியூர் அமுதாவின் வாசகர் கடிதங்கள் (5.00) வெளியீடு: சின்னஞ்சிறு கோபு, முடிகண்டநல்லூர், செம்பனார் கோவில், தஞ்சை — 609 309.

காய்கறிகளின் மருத்துவக் குணங்கள் (4.00) டாக்டர் திருமலை நடராசன் — தமிழ்ச் செல்வி நிலையம், 43, சித்திரைக்குளம் வடக்குத் தெரு, மயிலாப்பூர், சென்னை — 600 004.


விவாதங்கள் விமர்சனங்கள் (20.00) சுஜாதா. காவ்யா, 8, சாஸ்திரி நகர், 2வது குறுக்கு, பெங்களூர் — 560 038.

பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள் (5.00) — சிறுவர் சிறுகதைகள் — நாரா நாச்சியப்பன் — தமிழாலயம், 137, ஜானிஜான்கான் சாலை, சென்னை — 600 014.


சுவடுகள் (0.75) கவிதைத் தொகுப்பு: கோவை சதாசிவம் — ஆர். ஆறுமுகம், 95, மெயின் ஆள்வார்பேட்டை, குன்னூர் — 1, நீலகிரி மாவட்டம்.

தூரத்து ரசிகன் (6.00) — இரா. மயில்சாமி — புதுக் கவிதைத் தொகுப்பு — கனிமுத்துப் பதிப்பகம், அம்பாள் பில்டிங், 727, அண்ணாசாலை, சென்னை — 600 006.

நந்தலாலா (9.00) — மாலன் — நாவல் — கனிமுத்துப் பதிப்பகம், அம்பாள் பில்டிங், 727, அண்ணாசாலை, சென்னை — 600 006.



FREE E- BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர். தி. நாராயணபாரதி; வெளியிடுபவர்: கி ராமச்சந்திரன், 1494 - அண்ணா நகர், சென்னை- 600 040. அச்சிடுவோர்: எஸ்.எம். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, Dr நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, MS-5

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

வட்டு: ஒரு இதழ் 1 JULY 1985 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-50

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)




# A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS , www.thamizham.net.,